

திட்டக்குடி சட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் சி.வி. கணேசன் நல்லூர் தெற்கு ஒன்றியம் கணபதிகுறிச்சி கிராமத்தில் வயல்வெளியில் வேலை செய்து கொண்டிருக்கும் பெண்களிடம் வாக்கு சேகரித்தார். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் தோழமைக் கட்சிக்கு நிர்வாகிகள் உள்ளனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில்மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தி.மு.க. சார்பில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. செஞ்சி ஒன்றியம் பாடிப்பள்ளம், புதுப்பேட்டைஆகிய கிராமங்களில் உள்ள வாக்காளர்களிடம் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு கேட்டு தீவிர பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், ஒன்றிய செயலாளர்கள் விஜயராகவன், பச்சையப்பன், துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, ஊராட்சி மன்ற தலைவர்கள் தாட்சாயணி கார்த்திகேயன், சுபா குமார் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

### தமிழகத்தை ஆளவேண்டும் என்ற கனவில்

# பா.ஜ.க. தலைவர்கள் எத்தனை முறை படையெடுத்தாலும் தாமரை மலராது!

## திண்டுக்கல்லில் மார்க்சிஸ்ட் பொதுச் செயலாளர் எம்.ஏ.பேபி பிரச்சாரம்!

திண்டுக்கல், ஏப். 14 –

தமிழகத்தை ஆள வேண்டும் என்ற கன வில் பா.ஜனதா அரசு எத்தனை முறை பழ னிக்கு காவடி எடுத்தா லும் தாமரை மலராது என்று மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்டு கட்சியின் தேசிய பொதுச்செயலா ளர் எம்.ஏ.பேபி பேசினார்.

திண்டுக்கல் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளராக போட்டியிடும் செந்தில்குமார் போட்டியிடுகிறார். மேட்டுப்பட்டி புனித வியாகுல அன்னை தேவாலயத்தில் நடந்த பாஸ்கு திருவிழாவில் கலந்துகொண்டு, கிறிஸ்தவர்களிவர்களிடம் உதய சூரியன் சின்ன த்துக்கு வாக்கு சேகரித்து பிரச்சாரம் செய்தார். பின்னர் மாலையில் நாகல்நகர் பகுதி யில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி, மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்டு கட்சி சார்பில் நடந்த பொதுக்கூட் டத்தில் அவர் பங்கேற்றார்.

கூட்டத்துக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு மாநகர செயலாளர் அரபு முகமது தலைமை தாங்கினார். சி.பி.ஐ. மாவட்ட செயலாளர் பிரபாகரன் முன்னிலை வகித்தார். ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.



பெரியசாமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு தேசிய பொதுச்செய லாளர் பேபி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு பேசினர். இதில் பேபி. கழக வேட்பாளர் இ.பெ.செந்தில்குமாரை ஆதரித்து பேசினார்.

**மதரீதியாக மக்களைப் பிளவுப்படுத்தும் பா.ஜ.க.!**

ஆர்.எஸ்.எஸ். பாசிச அமைப்புகளுடன் பிரதமர் மோடி கைக் கோர்த்து புது டெல்லியில் இருந்து தமிழ கத்தில் ஆதிக்கம் செலுத்த நினைக்கிறார். அவர்களை தி.மு.க. கூட்டணி வீழ்த்தும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சின்னத்தில் தி.மு.க. சின்னமான உதயசூரியனுக்கும் நட்சத்திரத்திற்கும் இயற்கையாகவே நெருங்கிய தொடர்பு உண்டு. ஆழமான பிணைப்பு உண்டு

அதுபோலதி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்கு இடையே கொள்கை ரீதி யாக ஆழமான பிணைப்பு உள்ளது. ஆனால் மத்திய பா.ஜனதா அரசோ சாதி, மதரீதியாக மக்களை பிளவுபடுத்தி பார்க்கிறது. வுபடுத்தி அவர்களுடன் தான் அ.தி.மு.க. கூட்டணி வைத்து தேர்தலை சந்திக்கிறது. மாநில சுயாட்சி வேண்டும். மாநில அரசின் உரிமை களை பாதுகாக்க வேண்டும் என தி.மு.க.. கூட்டணி விரும்புகிறது.

ஆனால் அதற்கு மத்திய அரசு அதி கார பகிர்வுடன் இருக்க வேண்டும். பா.ஜனதா அரசு மாநிலங்களை உடைத்து மைகளை பறிக்க நினைக் த்து அதன் உரி கிறது. திருப்பரங் குன்றம் பிரச்சினையில் அயோத்தி யாக மாற்றிக் காட்டுவோம் என கூறி மத நல்லிணக்கத்தை சீர்கு லைக்க பார்த்தனர். ஆனால் மாநில அரசின் நடவடிக்கை, மத ஒற்றுமை அமைப்புகளால் அந்த முயற்சி தடுக்கப்பட்டது.

**தாமரை மலராது**

மத்திய அரசு நியமிக்கும் கவர்னர்கள் மாநிலத்தில் சர்வாதிகாரம் செய்ய பார்க்கிறார்கள். இதை எதிர்க்கும் மாநிலங்களுக்கு நிதி விடுவிப்புதில்லை.தமிழகமும் அதற்கு விஜய் விளக்கு இல்லை. பழனி முருகனுக்கு காவடி, பால்குடம் எடுத்து வேண்டுதல் வைத்து நிவார ணம் தேடுவார்கள்.ஆனால் தமிழகத்தை ஆள வேண்டும். என்ற கனவில் பா.ஜனதா அரசு எத்தனை முறை காவடி எடுத்தாலும் இங்கு ஒருபோதும் தாமரை மலராது.

இவ்வாறு அவர் பேசி னார். கூட்டத்தில், மாநகர செயலாளர் ராஜாப்பா, மேயர் இளமதி,தி.மு.க. ஒன் றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, மாநகர பொருளாளர் சரவணன், பகுதி செயலாளர்கள் சூசை ராபர்ட், பஜ்ருல்ஹக், ராஜேந்திர குமார் திண்டுக்கல் எம்.பி. சச்சிதானந்தம் , முன்னாள் எம்எல்ஏபாலபாரதி, சச்சிதானந்தம், மாநகர காங்கிரஸ் தலைவர் மணிகண்டன் மணிகண்டன் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளர்

# ஐ.பெரியசாமி ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியில் தீவிர வாக்குச் சேகரிப்பு!

## 100 நாள் வேலைத் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதி!

திண்டுக்கல், ஏப். 14 -

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளார் ஐ.பெரியசாமி சூறாவளியாக சுற்றுப் பயணம் செய்து கிராமம் கிராமமாக சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்து வருகிறார்.

சித்தையன்கோட்டை பேரூராட்சிக்குட்பட்ட சேடபட்டி, பேருந்து நிலையம், கடை வீதி, அழகர்நாயக்கன்பட்டி, புதுப்பட்டி, நரசிங்கபுரம் ஆகிய பகுதிகளுக்கு திறந்த வேனில் சென்று, அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

சேடபட்டிக்கு பிரச்சாரத்திற்கு வந்த அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு நூற்றுக்கும் மேற்பட்டி பெண்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். பொதுமக்கள் மத்தியில் பேசிய திமுக வெற்றி வேட்பாளார் ஐ.பெரியசாமி அவர்கள், தமிழக முதல்வராக ஸ்டாலின் தான் வரவேண்டுமென்று ஒட்டுமொத்த பெண்களும் விரும்புகின்றனர்.

காரணம், கடந்த 5 ஆண்டுகளாக தமிழகத்தில் உள்ள பெண்களின் முன்னேற்றிற்காக அவர் செய்த சாதனை திட்டங்கள்தான் என்றார். மே 10க்கு பிறகு வரும் மாதம் முதல் உங்ளுக்கு மாதந்தோறும் ரூ. 2 ஆயிரம் மகளிர் உரிமைத் தொகையாக வரப்போகிறது. ரூ. 8 ஆயிரத்திற்கான கூப்பன்களை கூட மகளிர் இடத்தில்தான் ஒப்படைக்க வேண்டுமென உத்திரவிட்டுள்ளார்.

காரணம் ஒவ்வொரு வீட்டில் உள்ள குடும்பத்தலைவியும், அந்த கூப்பனுக்கான தொகையை வீணாக்காமல் தங்கள் வீட்டிற்கு தேவைப்படும் பொருட்களை வாங்கி மகிழ்ச்சியடைவதற்கு தான் என்றார்.

ஆத்தூர் தொகுதியில் கன்னிவாடி, தாடிக்கொம்பு பேரூராட்சியில் தமிழக அரசின் 100 நாள் வேலைத்திட்டம் செயல்படுவதுபோல் மீதமுள்ள சின்னாளபட்டி, அய்யம்பாளையம், அகரம், ஸ்ரீராமபுரம், சித்தையங்கோட்டை பேரூராட்சி உட்பட 5 பேரூராட்சிகளிலும் தேர்தலுக்கு பிறகு 100 நாள் வேலைத்திட்டம் செயல்படுத்தப்படும். வேலையில்லா திட்டாட்டமும் ஒழிக்கப்படும் என்றார். 37 ஆண்டுகளாக உங்கள் குடும்பத்தில் ஒருவராக இருக்கும் எனக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மாபெரும் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்றார். தேர்தல் பிரச்சாரத்தில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், முன்னாள் ஒன்றிய செயலாளர் பி.சி.முரளிதரன், மற்றும் நிர்வாகிகள் தோழமைக்கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரித்து

# அம்பாசமுத்திரத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரப் பொதுக்கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் அறிவிப்பு!

நெல்லை, ஏப். 14 -

முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத்தளபதியார், அவர்களுடைய, வழிகாட்டுதலின்படி,துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் .உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு முழுவதும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி வேட்பாளர்களை ஆதரித்து சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார்கள்,

அந்த வகையில் அம்பாசமுத்திரம் சட்டமன்ற தொகுதி, அம்பாசமுத்திரம் நகரம் கல்யாணி திரை



யரங்கம் அருகில், இன்று (14.04.2026) மாலை 06.00 மணி அளவில், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியின் காங்கிரஸ் வெற்றி வேட்பாளர் வி.பி.துரை அவர்களை ஆதரித்து கை சின்னத்தில் வாக்குகளை கேட்டு மாபெரும் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளார்கள். இதில் கழக நிர்வாகிகள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள்,தோழர்கள் பொது மக்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும்.என நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்.

இதில் மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில அணி, நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை வார்டு செயலாளர்கள், நிர்வாகிகள், இளைஞர் அணி உள்ளிட்ட, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள், கழகத் தோழர் கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி, தலைவர்கள் தொண்டர்கள், வாக்களபெருமக்கள் அனைவரும் திரளாக பங்கேற்க கேட்டு கொள்கிறேன்.

ஸ்டாலின் தொடரட்டும்!

தமிழ்நாடு வெல்லட்டும்!

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### திருப்பத்தூர் – மண்டலவாடியில் இன்று

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை ஆற்றுகிறார்!

## மாவட்டச் செயலாளர் க.தேவராஜி அறிக்கை!

திருப்பத்தூர், ஏப். 14 –

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து – இன்று திருப்பத்தூரில் அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் முதல்வர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்கிறார். இதில் ஏராளமானோர் பங்கேற்குமாறு மாவட்ட செயலா ளர், க. தேவராஜி எம்.எல்.ஏ. கேட்டுக் கொண்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழக சட்டமன்றத் தேர்தல் நடைபெறுகிறது. அ.தையொட்டி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டி யிடும் வேட்பாளர்களை ஆதரித்து இன்று (14ஆம் தேதி –செவ்வாய்க்கிழமை) திருப்பத்தூர் மாவட்டத்தில் கழகத் தலைவர் – முதல்வர் தளபதி அவர்



கள் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

இன்று 14ம் தேதி செவ்வாய்க் கிழமை மாலை 6.00 மணி அளவில் வேட்பாளர்கள் வாணியம்பாடி SSB. சையத் பாரூக், ஆம்பூர் அ.செ.வில்வநாதன், ஜோலார்பேட்டை கவிதா தண்டபாணி, திருப்பத்தூர் அ.நல்லதம்பி ஆகியோரை ஆத ரித்து அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தலைமையில் மண்டலவாடியில் நடைபெற உள்ள பொதுக்கூட்டத்தில் சிறப்புரை ஆற்றுகிறார்.

எனவே இந்த பொதுக்கூட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக நிர்வாகிகள், மாவட் டக் கழக நிர்வாகி கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், தேர்தல் பணிக்குழு நிர்வாகிகள், உன் ளாட்சி பிரதிநிதிகள், கிளைக்கழக, வார்டு கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருப்பத்தூர் மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கையில் கூறி யுள்ளார்.




கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க. கார்த்திகேயன், திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் ஜி.ஆர்.வசந்தவேல் அவர்களை ஆதரித்து, உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட எறையூர் ஊராட்சியில் பொதுமக்கள் மற்றும் காரியக்காரர்களை நேரில் சந்தித்து, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து, உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளை சேகரித்தார். இதில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.

# “சித்திரைத்திங்களில் முத்திரைப்போர்”....

**ஒ**ரு பக்கம்
பெற்ற மகனின் துரோகத்திற்கு
பாடம் புகட்டத் துடிக்கும் தந்தையாக
மருத்துவர் ராமதாஸ் ..

அவரோடு சேர்ந்து தன் முதுகில் குத்திய எடப்பாடிக்கும்
அந்த துரோகியோடு சேர்ந்து கொண்டு
தன் நெஞ்சிலேயே குத்திய
தன் அக்காள் மகன் தினகரனுக்கு
பாடம் போதிக்க களம் குதித்துள்ள சின்னம்மா சசிகலா...

இவையாவுக்கும் மேலாக திராவிடத்திலிருந்து தமிழினத்தை
பிரிக்க
நாம் தமிழர் சீமான் என்றும்...



அதே திராவிடத்திலிருந்து சிறுபான்மை சமூகங்களை பிரித்துச் சிதைக்க
நடிகர் விஜய்க்கு “ஜோசப் விஜய்” என மத அடையாளம் கொடுத்து
தூண்டப்பட்டுள்ள
த.வெ.க.வையும்
தங்களுக்கு
புறத்துணையாக வைத்துக் கொண்டு..

“ஒன்றை எதிர்த்து அழிப்பது
மற்றொன்றை ஆதரித்து ஒழிப்பது” என்னும் நாக்பூர் சூழ்ச்சியோடு

திராவிட அரசியலை வேரறுக்கும் வெறியோடு

திராவிட கட்சி ஒன்றையே ஆயுதமாக்கிக் கொண்டு

பல பாதாளத் திட்டங்களோடு களமிறங்கியிருக்கும்
“பாரதீய ஜனதா”வின்
சித்தாந்த பகையை முறியடிக்க ...

ஆரியத்துக்கு எதிராக
பெரும் போர்
நடத்தி வருகிறார்
திராவிடச் சூரியனாம்
“முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்“

ஆம்....

இது தமிழ் மண்ணுக்கான தேர்தல்
என்பதை விட

இது
புறநானூற்று பூகோளத்தை அடிமைப்படுத்த
நினையும்

வடக்கிந்திய கம்பெனிக்கு எதிரான
ஜனநாயகப் போர் என்பதே
நிச்சயம்..

இதில்

பெரியாரும்
அண்ணாவும்
கலைஞரும்
மடியிட்டு
வளர்த்த திராவிடப் பெரும்படை
வென்று காட்டும் என்பது சத்தியம்...

விழிப்பாய்
தம்பி
நெருப்பாய்...

**என்னநாஞ்**
**சொல்றது**



**மருது அழகுராஜ்**
*கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்*